மனித
# உரிமைகள் மீட்பு
மாதமிருமுறை இதழ்

உரிமை - 7 மீட்பு - 22 பிப்ரவரி 16 - 30 | 2023 விலை 20/-



# மாநகராட்சி முன்வராததால் மதுரை வைகை ஆற்றில் தூய்மைப்பணியில் ஈடுபட்ட

# பொதுமக்கள்



# நீயும் பெண் தானே?

ஒவ்வொரு முறையும்
என்னை சந்திக்கும் போது...

களவாடி செல்கிறாள்
பணத்தை அல்ல
என் மனத்தை...

அவளை கண்டுபிடிக்கத்
தேடினேன்...

தண்டிப்பதற்கு அல்ல
சொந்தமாக்குவதற்கு.

கற்பனை கனவுகளை
கவிதை சிறைக்குள் அடைத்தேன்...

எங்கேயோ கடன் வாங்கி
கற்பனைக்கு வட்டியாக
கவிதை கொடுத்தேன்!

என் மௌன நதிகளை
காயப்படுத்தாமல்
சேமித்து வைத்த நினைவுகளை
கொஞ்சம் செலவு செய்தேன்...

கீழே விழுந்த நான்
சில மனிதாபிமானம்
உள்ள பெண்களை
உற்றுப் பார்த்தேன்
எனக்கு உதவவில்லை?

பிறகு காற்றின் கரம்பிடித்து
கவனமாக நடந்தேன்!

பெண்களை நினைத்து
என் மனது அழுதது...

அனைத்தையும் சொல்லும்
என் தாயிடம் கூட

சொல்ல முடியவில்லை
என் வலிகளை...

அன்பாய் கேட்கும்
என் நண்பர்களிடம் கூட

சொல்ல முடியவில்லை
என் வேதனைகளை...

ஆறுதல் தரும் கவிதைகளில்
கூட சொல்ல முடியவில்லை.

என் கண்ணீரை
புரியாமல் பார்க்கும்

உன்னிடம் கூட
சொல்ல முடியவில்லை என் காதலை...

பிறகு வானத்து நிலவில்
அவள் முகத்தை தேடினேன்...

உனக்கு காலும் இல்லை...
உனக்கு கையும் இல்லை..
ஆனால் மெல்லத் தவழ்கிறாய்

மேகம் விட்டு மேகம் மறைந்து
உன்னைத் தேட விடுகிறாய்

இந்த கண்ணாம்பூச்சி
விளையாட்டை எங்கு கற்றாயோ?...

உன்னை தேடும் என்னை
அழவைப்பதில் தான்
உனக்கு சந்தோசம் என்றால்...

என்றாவது ஒரு நாள்
உன்னை அழவைப்பேன்
என் கல்லறையில்.

- M. அப்துல்ரகுமான் (வழக்கறிஞர்)
நிறுவனர்
மக்கள் ஊழல் தடுப்பு இயக்கம்
மனித உரிமைகள் மீட்பு
95434 10000

# மனித உரிமைகள் மீட்பு

## (மாத இருமுறை இதழ்)

வெளியீட்டாளர்: M. அப்துல்ரகுமான்

உரிமை-7 மீட்பு-22 பிப்ரவரி 16-30 | 2023



**ஆசிரியர்:** நீலகிரி K. மதுசூதனன்.
**இணை ஆசிரியர்:** புதுவை K. ராஜாராம்குமார்.
**தொகுப்பு ஆசிரியர்:** வேலூர் M. ராமச்சந்திரன்.
**சிறப்பு உதவி ஆசிரியர்:** தேனி AR. நாசர்கான்.
**சிறப்பு துணை ஆசிரியர்:** நாகர்கோயில் Dr. S முகம்மது அலி,
**சிறப்பு செய்தி ஆசிரியர்:** வாணியம்பாடி G. வெங்கடேசன்.
**பொறுப்பு ஆசிரியர்:** பெரம்பலூர் M. இளவரசன்.
**தலைமை செய்தி ஆசிரியர்:** நாகர்கோயில் C.J. சுதர்மன்.
**கௌரவ ஆசிரியர்:** கிருஷ்ணகிரி Dr. குமரவேல்.
**தலைமை ஆசிரியர்கள்:** Dr. முகம்மது காசிம், Dr. K. கலைச்செல்வன்.
**முதன்மை ஆசிரியர்கள்:** பரமகுடி S. பதர்னிஷாபேகம், R.M நந்தினி, T. அரவிந்தன், Dr. P. முருகேசன், கேரளா P.K. பிரதிஷ், SGM. ரமேஷ்.

**நிர்வாக ஆசிரியர்கள்:**
Dr M. ஹரிகிருஷ்ணன், M. காதர் முகைதீன்.
**கௌரவ இணை ஆசிரியர்கள்:** R. அகிலேஷ், A. கேம்ராஜ் N. அன்பழகன், A. பிரபாகரன், S.A. சையதுமுகைதீன் ஆலிம், S. லோக சுந்தரம், A.விஜி, R. ரத்தீஷ், C.சதிஷ்.
**கௌரவ செய்தி ஆசிரியர்கள்:**
S. ஆல்பர்ட் பிரான்சிஸ் சேவியர், R. சந்திரபோஸ்.
**பொறுப்பு இணை ஆசிரியர்கள்:** S. ரமேஷ், R. சாம் எட்வர்ட்.
**செய்தி ஆசிரியர்கள்:**
R. M. பரமகுடி ராமச்சந்திரன், புதுவை S செல்வமணி.
**கௌரவ இணை ஆசிரியர்:** A.R. பத்மநாதன், RNS. வெங்கடேஷ்வரா
**முதன்மை துணை ஆசிரியர்கள்:** M. தனராஜ், M. லோகேஷ்.
**பொறுப்பு இணை ஆசிரியர்கள்:**
D. கென்னடி, L.S. மனோகரன், S. தினேஷ்ராஜ், S. முத்து இப்ராகிம் ஷா, M. ஜெய்பிரசாத்.
**தலைமை இணை ஆசிரியர்கள்:**
G. திருச்செந்தில்வேல், T. செந்தில்குமார், ST ஜோசப், K. சதீசன்.
**தலைமை கௌரவ ஆசிரியர்கள்:**
M. கார்த்திக், A. ஷபீக் ரகுமான்.
**தொகுப்பு இணை ஆசிரியர்கள்:**
M. விஜயகுமார், S.B. ரவிக்குமார்.
**தொகுப்பு துணை ஆசிரியர்கள்:**
C. பெருமாள், J. கோவிந்தராஜ், C. அய்யாவு, R. தாகிர், K. ரவிச்சந்திரன்.
**துணை ஆசிரியர்கள்:**
D.சுரேஷ்குமார், G.சுரேஷ், A. மன்சூர், தனுஷ் பாண்டியன், J தாஹிர்.
**கௌரவ துணை ஆசிரியர்கள்:**
P. சதீஷ், G. அருள்செல்வன், D. கோபிநாத், P. உதயகுமார், A.T. அஷ்ரப், S. ரவிக்குமார்.
**உதவி ஆசிரியர் குழு:**
K. நமச்சிவாயம், S. சரவணன், M.S. ஆரோக்கியசாமி, M. விஜயேந்திரன். K. தம்புசாமி, முசா(எ)சாகுல் ஹமீது, Dr. ஸ்டேன்லி மோசஸ், Dr. L. ரமேஷ், A.S. அருண்குமார், A. முஜிபுர் ரகுமான், M. மாலா, M. ஆனந்தராஜ், AMS. ஹம்சத்அலி, R. சுப்பு, D. ராஜீவ்காந்தி, S. முரளிதரன், T. சுதாகர், S. கலாநிதி, G. கலையரசன், M. நாகராஜ், கிஷோர் குமார், ஜெயின் சன்சா, R.மலர்கொடி, RD ராம்குமார், A. ஆரோக்கியசாமி.
**நிருபர்கள்:**
M. தயாநிதி, S. சுல்தான்அலாவுதீன், M.சுரேஷ்குமார், M. செய்யது சகாபுதீன், S. சீனிவாசன், S. கிருஷ்ணன், P. வேல்முருகன், A. பார்த்திபன், S. சுரேஷ், S. சுப்ரமணி, லாசரஸ் கோவல், D. வில்வநாதன், G. ஜாபர் அலி, Dr.A. அருள்சாமி, V. முத்துகுமரேசன், S. சுந்தரமூர்த்தி, C. பிரபாசிங், M.J. சீனிவாசன், B. செல்வமணி, Dr. முஸ்தபா, S. லோகநாதன், A. முகமது தௌபிக், M. ஈஸ்வரி, V. ராஜாமுகமது, I. இப்ராஹிம், S.S. சஹாபுதீன், A. முகமது இதிரீஸ், R. ஜெயாகிருஷ்ணன், K. ரஜமோனி, A. விஜயசிங்கம், G. குமரேசன், M. அஹமத்முஸ்தபா ஆலிம், M. தமிழ்செல்வன், Y. முபாரக், ரியாஸ் அகமது, S. முகமது ஷெரீப், முஜிபூர்ரகுமான், S. சசிகுமார், R. ரவி, A. அமிர்தவேல், Y. மைதின் ஷசா, V. செல்வராஜ், S. சபாபதி, Dr. டார்வின் ஜான், ஜெயசுனிதா, R. சுதாகர், A. செல்வராஜ், C. அய்யாவு, K. சின்னராஜா, N. சுரேஷ், Y. முபாரக் அலி, S. ரியால் அகமது, M. கோவிந்தராசு, முரளி (எ) பிரேம்குமார், S. பாலமுருகன், S. தென்னரசு, Dr. ஜான் டைட்டஸ் இம்மானுவேல், R. பிரஸ்டன்ட், R. டேனியல், சத்திய நாராயணன், இர்பான், W. பீட்டர், கார்த்திகேயன், சரவணன், ஜான் மார்க், கோபாலகிருஷ்ணன், B. புஷ்பலதா, C. பெருமாள், K.A. செல்வராஜ், K. குணசேகரன், M. கலந்தர் முகைதின், S. சுந்தரமூர்த்தி, M. சுரேஷ், P. சிவகாமி, உபகாரம், ஆறுமுகம், A. பாலசுப்பரமணியன், தாமரைகனி, K. மணிகண்டன், M. பாலமுருகன், R. நாகராஜன், வேலுச்சாமி, K.S.சசிகுமார், L. ராஜகணபதி, A. ஜாபீர், M.மனோஜ், S. வெங்கடேஷ்குமார், G.ஜெயபிரகாஷ், S.ரபி, N.ஜெய்கணேஷ், M.ராஜா, M.தயாளன், K. விஜயகுமார், P. கிரேசி எலிசபத்மேரி, A.சக்திவேலு, V.சக்திவேல், D.சிவப்பிரகாசம், R.விவேக்கமல், K.ராஜா, H. ஹாஜா மைதின், R. ஜீவனந்தம், S. ஜான்சன், T. ஜெயசந்திரன், முபாரக் அலி, ராஜா முகமது, ரஸியாபேகம், சுவைஹாபேகம், M. மல்லிகா, முகமது அஜீஸ் K. ராஜ்குமார், V. தசரதன்.
**சட்ட ஆலோசகர்கள்:**
R. சிவக்குமார் BA BL (மதுரை),
R. சீதா BA BL (பட்டுக்கோட்டை), C. பாலாஜி BA BL (திருச்சி),
M. ஞானசேகரன் BA BL (பொன்னமராவதி),
K. கேசவமூர்த்தி BA BL (தஞ்சாவூர்),
R. S. ராஜேந்திரன் BA LLB (வேதாரண்யம்),
C. முருகன் BA BL (நாகப்பட்டினம்),
D.G. தினகரன் BA LLB (கிருஷ்ணகிரி),
S. மோகன் காந்தி BA BL (ஓசூர்).
**புகைப்பட நிருபர்கள்:**
AMS. சல்மான் அஹமது, A. குர்சித் ஆலம் கான், R. ரவி, V. வித்யாவீரப்பன், M. அருண், Dr.R. செல்வராணி. K. ஷக்கீனா சொர்ணலதா, மதிவிழி.



**இந்த இதழ் குறித்த அனைத்து தொடர்புகளுக்கும் முகவரி:**
ஆசிரியர்,
**மனித உரிமைகள் மீட்பு (மாத இருமுறை இதழ்)**
எண்:2/115D1, ஆன்டாஞ்சிரா, கொன்னச்சால் Po,
எருமாடு, பந்தலூர் தாலுக்கா, நீலகிரி மாவட்டம்,
தமிழ்நாடு-643239. செல்: 9543410000
Mail: manithurimaigalmeetpu@gmail.com
http://internationalhumanrightswatch.org


"மனித உரிமைகள் மீட்பு" இப்பொழுது ஆன்லைன் செய்திகளாய் உலகமெங்கும். https://youtube.com/@manithaurimaigalmeetpu5936 என்ற Youtube மூலமாக காணலாம் மற்றும் சமூக வலைத்தளத்தில் பகிரலாம்.

எல்லா வழக்குகளும் சென்னையில் உள்ள உயர்நீதிமன்றத்தின் வரம்புக்கு மட்டுமே உட்பட்டவை. இதழில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு மனித உரிமைகள் மீட்பு இதழ் நிர்வாகம் பொறுப்பல்ல. பேட்டிகள் சிறப்பு கட்டுரையாளர்கள் இன் கருத்துகள் அவர்களின் சொந்த கருத்துகளே.

### முக்கிய அறிவிப்பு

**மனித உரிமைகள் மீட்பு பத்திரிக்கை சங்கங்கள் இல்லை. மனித உரிமைகள் மீட்பு என்பது இந்திய பத்திரிக்கை துறையில் RNI பதிவு பெற்ற பத்திரிகையாகும். சில நபர்கள் மனித உரிமைகள் என்ற பெயரில் அமைப்புகள் மற்றும் சங்கங்கள் போன்று செயல்பட்டால் பத்திரிக்கை நிர்வாகம் பொறுப்பேற்காது.**

**இப்படிக்கு**
**-ஆசிரியர்**



# மாநகராட்சி முன்வராததால் மதுரை வைகை ஆற்றில் தூய்மைப்பணியில் ஈடுபட்ட பொதுமக்கள்

**மா**நகராட்சி தூர்வார முன்வராததால் தன்னார்வலர்கள் பொதுமக்கள் திரண்டு மதுரை வைகை ஆற்றில் குவிந்து கிடந்த குப்பைகளை அகற்றி இன்று தூய்மைப்பணியில் ஈடுபட்டனர்.

மதுரை வைகை ஆற்றில் கடந்த காலத்தில் மாநகராட்சி நிர்வாகம் வாரம் ஒரு முறை அல்லது குறைந்தபட்சம் மாதத்தில் ஒரு முறையாவது மெகா தூய்மைப்பணி செய்தது. அந்த நிகழ்ச்சியின்போது கரையோரங்களில் வசிக்கும் மக்கள், குப்பை கொட்டுவோரிடம் மாநகராட்சி பணியாளர்கள் ஆற்றில் குப்பைகளைக் கொட்டக்கூடாது என விழிப்புணர்வு ஏற்படுத்துவர். மாநகராட்சியின் இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சியில் பள்ளி, கல்லூரி மாணவர்கள் ஏராளமானோர் பங்கேற்பார்கள்.

இதனால், அடுத்த தலைமுறையினருக்கும் வைகை ஆறு போன்ற நீர்நிலைகளில் குப்பைகளை கொட்டக்கூடாது என்ற விழிப்புணர்வு ஏற்பட்டது.

இந்நிலையில் கடந்த மூன்று ஆண்டுகளாக வைகை ஆற்றில் மாநகராட்சி சார்பில் மெகா தூய்மைப்பணி மேற்கொள்ளப்படவில்லை. மேலும், அன்றாட தூய்மைப்பணியிலும் மதுரை வைகை ஆறு சேர்க்கப்படவில்லை. இதனால், வைகை கரை வார்டுகளில் தினசரி தூய்மைப்பணியில் ஈடுபடும் தூய்மைப்பணியாளர்கள், ஆற்றில் இறங்கி அங்கு கொட்டும் குப்பைகள், பாலித்தீன் பைகளை அகற்றுவதில்லை. மேலும், ஆற்றில் குப்பை கொட்டுவதைத் தடுக்கவும் மாநகராட்சி கண்டிப்பான நடவடிக்கை எடுக்கவில்லை.

இதனால், இன்று வைகை நதி மக்கள் இயக்கத்தினர், பொதுமக்களை, பள்ளி மாணவர்களுடன் இணைந்து வைகை ஆற்றில் குப்பைகளை சேகரித்து தூய்மைப்படுத்தும் பணியில் ஈடுபட்டனர். இந்த நிகழ்ச்சியில் வைகை நதி மக்கள் இயக்க ஒருங்கிணைப்பாளர் வைகை ராஜன், தன்னார்வலர்கள் மணிகண்டன், செந்தில்குமார், ஆறுமுகம், ராஜவேலு, சரவணன் உள்பட ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

வைகை நதி ராஜன் செய்தியாளர்களிடம் கூறியதாவது: "வைகை ஆற்றில் குருவிக்காரன் சாலைப்பகுதியில் குப்பைகளை சேகரித்தோம். இந்த ஒரு பகுதியில் அரைமணி நேரத்திற்குள் 20 பண்டல்களில் நிலத்தில் மக்காத பாலித்தீன் பைகளை சேகரித்தோம். அப்படியென்றால், மதுரை முழுவதும் இந்த ஆற்றில் எவ்வளவு பாலித்தீன் குப்பைகள் பரவிகிடக்கும். இந்த பாலித்தீன் குப்பைகள், மண் வளத்திற்கும், நிலத்தடி நீர் செல்வதற்கும் மிகப்பெரிய தடையாக உள்ளது. நாங்கள் சேகரித்த பாலித்தீன் கழிவுகளை மறுசுழற்சி செய்வதற்கு தியாகராஜர் கல்லூரியில் உள்ள மறுசுழற்சி மையத்தில் ஒப்படைக்க உள்ளோம்." இவ்வாறு அவர் கூறினார்.






# ரூ.105 கோடி மதிப்பில் 106 நவீன நெல் சேமிப்பு தளங்கள்

**தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் சார்பில் ரூ.105.08 கோடி மதிப்பில் அமைக்கப்பட்டுள்ள 106 நவீன நெல் சேமிப்புத் தளங்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார். மேலும், ரூ.54 கோடியில் அமைக்கப்பட உள்ள 12 புதிய வட்ட செயல்முறைக் கிடங்குகளுக்கு அடிக்கல் நாட்டினார்.**

கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை சார்பில் தலைமைச் செயலகத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில், காணொலி காட்சி மூலம் நெல் சேமிப்புத் தளங்களை முதல்வர் திறந்துவைத்தார். பொது விநியோகத் திட்டத்துக்கான உணவு தானியங்களை சேமிக்கும் வகையில், டெல்டா மாவட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் அதிக அளவில் கிடங்குகள் கட்டப்பட்டு வருகின்றன. இதையொட்டி, 10 மாவட்டங்களில், 18 இடங்களில் 2,86,350 டன் கொள்ளளவு கொண்ட, மேற்கூரையுடன் கூடிய நெல் சேமிப்புத் தளங்கள் ரூ.238.07 கோடி மதிப்பில் அமைப்பதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அவற்றில் பணி முடிக்கப்பட்ட, தஞ் சாவூர், திருவாரூர், திருச்சி, புதுக்கோட்டை, மதுரை, சிவகங்கை, தூத்துக்குடி, திருவள்ளூர்














மாவட்டங்களில், ரூ.105.08 கோடி மதிப்பில், மொத்தம் 1,42,450 டன் கொள்ளளவு கொண்ட, மேற்கூரையுடன் கூடிய 106 நவீன நெல் சேமிப்புத் தளங்களை முதல்வர் திறந்து வைத்துள்ளார். பொது விநியோக திட்டத்தில் விநியோகிக்கப்படும் பொருட்களை சேமித்துவைக்க புதிதாக உருவாக்கப்பட்டுள்ள வட்டங்களில், செயல்முறைக் கிடங்குகளை நிறுவவும் அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

202223ம் ஆண்டுக்கான கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை மானியக் கோரிக்கையில், உணவு தானியங்களைச் சேமிப்பதற்காக 12 வட்ட செயல்முறைக் கிடங்குகள், 28,000 டன் கொள்ளளவில், ரூ.54 கோடி மதிப்பில் கட்டப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதன்படி, சிவகங்கை, அரியலூர், வேலூர், திண்டுக்கல், திருச்சி, நாமக்கல், சேலம், திருவண்ணா மலை மாவட்டங்களில் ரூ.54 கோடி மதிப்பில், 28,000 டன் கொள்ளளவு கொண்ட, 12 புதிய வட்டச் செயல்முறைக் கிடங்குகளுக்கு முதல்வர் அடிக்கல் நாட்டினார்.

இதன்மூலம் நியாயவிலைக் கடைகளுக்கு விநியோகம் செய்யப்படும் உணவுப் பொருட்களைப் பாதுகாப்பாக அந்தந்த வட்டத்துக்கு உள்ளேயே சேமித்து வைத்து, காலதாமதமின்றி நியாயவிலைக் கடைகளுக்கு அனுப்பிவைக்க முடியும். இந்த நிகழ்ச்சியில், உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறைச் செயலர் ஜெ.ராதாகிருஷ்ணன், உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையர் வே.ராஜாராமன், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக மேலாண் இயக்குநர் சு.பிரபாகர் கலந்துகொண்டனர். இதேபோல, காணொலி வாயிலாக நாமக்கல் மாவட்டத்திலிருந்து உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, வனத் துறை அமைச்சர் மா.மதிவேந்தன், எம்.பி.கேஆர்என்.ராஜேஷ் குமார், எம்எல்ஏக்கள் கே.பொன்னுசாமி, பி.ராமலிங்கம், நாமக்கல் மாவட்ட ஆட்சியர் ஸ்ரேயா பி.சிங் ஆகியோர் கலந்து கொண்டனர்.



# வ.உ.சியின் சமூக நீதி கொள்கை இளைஞர்களுக்கு தேவை !

**உலகிலேயே 40 வருஷம் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட ஒரே தலைவர் வ.உ.சிதம்பரம்..!**

**அதிலும் கோவை சிறைதான், வஉசிக்குள் பெருமளவில் தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கிறது..!**

அந்த ஜெயிலர் பெயர் மிஞ்ஜேல்... ரொம்ப மோசமானவன்.. கொடூரக்காரன்..!

ஜெயிலுக்குள் கொண்டு செல்லும்போதே, கை, கால்களை கட்டி தெருவெல்லாம் இழுத்து சென்றுள்ளனர்..!

வஉசிக்கு சிறைக்குள் தனி ரூம்.. ஆனால் அதில் காற்று வசதி இல்லை.. சுத்தமும் சுகாதாரமும் இல்லை.. கால்களில் விலங்கு பூட்டப்பட்டுதான் வஉசியை அடைத்துவைத்தனர்..!

ஜெயிலுக்குள் சென்றதுமே தலையை மொட்டை அடித்திருக்கிறார்கள்.. ஒரே ஒரு டிரஸ் தந்திருக்கிறார்கள்.. அதுகூட சாக்குப் பையால் தைத்தது.

ஒருநாளைக்கு ஆயிரம் பேருக்கு சாப்பாடு போட்டவருக்கு, ஜெயிலில் கூழ் தந்தார்கள்.. அதுவும் புளித்து போயிருந்தது.. சில சமயம் அந்த கூழில் புழுக்கள் மிதக்குமாம்..!

உடல்நிலை மோசமானதால், ஒருநாள் மட்டும் அரசி சோறு கேட்டாராம் வஉசி.. அதற்காக 3 நாளைக்கு, அந்த கூழை கூட தராமல் பட்டினி போட்டுள்ளான் அந்த ஜெயிலர் மிஞ்ஜேல்.

சணல் கிழிக்கும் மிஷினை கையாலேயே சுற்ற வேண்டும்.. இதுதான் வஉசிக்கு தரப்பட்ட முதல் வேலை... அப்படி செய்ததால், வஉசியின் கைகளில் உள்ள தோல் கிழிந்து ரத்தம் கொட்டி உள்ளது.. அதை பார்த்து ஒரு கைதி, மனசு கேட்காமல் ஓடிவந்து மிஷின் சுற்றுவதை தடுத்துள்ளார்..

ஆனால் அந்த கைதியை அடித்து நொறுக்கினான் மிஞ்ஜேல்... பிறகு, கையால் செய்யும் வேலைகளை தராமல், செக்கிழுக்கும் வேலையை தந்துள்ளனர்.. அதாவது மாட்டுக்கு பதில் வஉசியை பூட்டினர்.. அதுவும் உச்சிவெயிலில்.. இதில் மயங்கி கீழே விழுந்துவிட்டால், சவுக்காலேயே அடிப்பார்கள்..!

வஉசியின் மதிப்பு தெரிந்த கைதி ஒருவர், தன்னுடைய தலைக்கு மேல் 2 கைகளையும்

கூப்பி "வணக்கம் ஐயா" என்றார்.. அவ்வளவுதான், ஜெயிலுக்குள் கலவரம் வெடித்து, ஒரு கைதி துப்பாக்கி சூட்டில் இறக்குமளவுக்கு பிரச்சனை செய்துவிட்டான் அந்த ஜெயிலர்.

வஉசி விடுதலை செய்யப்பட்டும் தன்னுடைய வக்கீல் பணியை தொடர முடியாத அளவுக்கு லைசென்ஸ் பிடுங்கிவிட்டனர்.. ஒரு அரிசி கடையில் வேலை பார்த்தார்.. நாள் முழுக்க வேலை பார்த்துவிட்டு, 4 ஆழாக்கு அரிசியோடு வீட்டுக்கு போவாராம்.. இந்த விஷயம் தெரிந்த அந்த மளிகைக் கடைக்கு சீல் வைத்து விட்டனர் பிரிட்டிஷ் அதிகாரிகள்..!

அரை வயிற்று கஞ்சிக்குகூட கஷ்டப்படும் நிலை வந்ததால்தான், தலையில் மண்ணெண்ணெய் சுமந்து விற்றுள்ளார்...!

இதைவிட கொடுமை, தன்னுடைய வக்கீல் உரிமத்தை மீட்டெடுக்க கோர்ட்டில் வாதாடி உதவ வேண்டும் என்று வஉசி கேட்டதற்கு, மூத்த வக்கீலான மூதறிஞர் ராஜாஜி மறுத்துவிட்டாராம்.

சில சமயம் காந்தியை விட்டுத்தராமலும், சில சமயம் காந்தியின் கொள்கைகளை ஏற்க முடியாமலும் எதிர்த்துள்ளார் வஉசி..!

வஉசி குடும்பம் வறுமையில் உள்ளதை கேள்விப்பட்டு, தென் ஆப்பிரிக்காவில் உள்ள தமிழர்கள், 5000 ரூபாய் நிதி திரட்டி காந்தியிடம் தந்திருக்கிறார்கள்.. "எப்படியாவது வஉசியிடம் இந்த பணத்தை சேர்த்துவிடுங்கள்" என்றும் சொல்லி உள்ளனர்.. லெட்டர் மேல் லெட்டர் போட்டும் காந்திக்கு ஞாபகப்படுத்தி கொண்டே இருந்தனர்..!

ஆனால் அந்த பணத்தை காந்தி, வஉசிக்கு தரவே இல்லையாம்.. "காந்தி கணக்கு" என்று நாம் சொல்கிறோமே.. அது இதுதான்! (திலகர், இந்த விஷயத்தில் தலையிட்டு பஞ்சாயத்து செய்து, அந்த பணத்தை வஉசிக்கு பெற்று தந்தது தனி கதை)

வஉசிக்கு இணையான ஒரு தியாகியோ, போர்க்குணமுள்ள ஒரு தலைவரோ இந்திய அரசியலிலேயே கிடையாது. ஆனாலும் சொந்த கட்சியில் உரிய மரியாதையை, அவர் இறந்தும்கூட தராதது வருந்தத்தக்கது.. சில வழக்குகளை எதிர் கொள்வதற்கும் கூட அவருக்கு காங்கிரஸ் உதவவில்லை என்பது கசப்பான உண்மை..!



**முனைவர் மு. ரஜினி அவர்கள், மேனாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு. ஷி.ரி. கார்வேந்தன் அவர்களின் "சமூகநீதி " தமிழ் புத்தகத்தை ஆங்கிலத்திலும் ஹிந்தியிலும் மொழி பெயர்த்து வருகிறார். மேனாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு பொன்ராதாகிருஷ்ணன் அவர்களின் "ராமானுஜம்" என்ற புத்தகத்தையும் ஆங்கில செய்யுள் வடிவில் மொழிபெயர்த்தவர்.**

உண்மையை சொல்வதானால், பிரிட்டிஷ் அரசின் ஒடுக்குமுறைக்கு ஆளாகி சீரழிந்ததைவிட, சொந்த கட்சியின் துரோகத்தால்தான் அதிகம் துவண்டுபோனார் வஉசி..!

பல்லாண்டு காலமாய் அடிமைப்படுத்தியிருந்த வெள்ளையர்களுக்கு எதிராகக் கப்பல் விட்ட பெருமை இந்தியாவிலேயே தமிழன் வஉசிக்குதான் உண்டு..!

இந்த தேசத்தின் தலைவராக உயர்ந்திருக்க கூடியவர் வஉசி.. ஆனால், வஉசியின் வரலாற்றை மறைத்துவிட்டு வாஞ்சிநாதனை பிரதானப்படுத்த காரணம் என்ன?

1806ல் வேலூர் புரட்சியை அலட்சியப்படுத்திவிட்டு, 1857ல் வந்த சிப்பாய் கலகத்தை பெரிதுபடுத்த காரணம் என்ன?

ஒன்றுமட்டும்விளங்குகிறது..எப்பேர்ப்பட்ட தியாகத்தையே செய்திருந்தாலும், அதை தீர்மானிப்பது இந்திய அரசியலின் "சாதி" தான்..!

இனியாகிலும் "வஉசி கப்பல் ஓட்டினார், செக்கிழுத்தார்" என்பதை மட்டுமே சொல்லி சுருக்கிவிடாமல், அவருடைய சமூக நீதி கொள்கையை மக்களிடையே, இன்றைய இளைஞர்கள் அழுத்தமாக பரப்ப செய்ய வேண்டும்..!

தமிழர்களை மட்டுப்படுத்தவும், ஏளனப்படுத்தவும், யாருக்குமே தகுதி கிடையாது என்பதையும் செவிப்பறையில் ஓங்கி அறைந்து சொல்ல வேண்டும்..!

# 1940-1980 பிறந்தவர்கள் அனுபவித்த மறக்கமுடியாத அனுபவங்கள்!

## அது ஒரு அழகிய கனாக்காலம்




6 மணி சங்கு .. 10 மணி சங்கு ... 1 மணி சங்கு ... 5 மணி சங்கு .. 8 மணி சங்கு... சங்கு ஊதலைக் கேட்டு நேரம் தெரிந்து கொண்ட காலம்..!

மணிக்கூண்டு கடிகாரத்தைப் பார்த்து நேரம்.. காலம்.. தெரிந்து கொண்ட காலம் ...!

கைக்கடிகாரம் அரிதாக இருந்த காலம்... கைக்கடிகாரம் கட்டியவர்களை வசதி படைத்தவர்களாகப் பார்த்தக் காலம்...!

கைக்கடிகாரத்தை தினமும் கீ கொடுத்து .. வைண்டிங் செய்து.. நேரம் பார்த்து ..அதனைப் பொக்கிஷமாக வைத்திருந்த காலம்.!

நாட்டு ஓடு வீடுகள் அதன் நடுவில் முற்றம் .. மழை பெய்தால் குற்றால அருவி போல் கொட்டும் காலம்.

பெரிய கூட்டுக் குடும்பங்கள்

ஓயாத பிள்ளைகள் சத்தம்.

சாணி தரையில் தவழ்ந்து நகர்ந்த சிறு குழந்தைகள் ...! பிள்ளைகள் நிறைந்த கலகலப்பான வீடுகள் ...! பிள்ளைகளெல்லாம் வீட்டின் நடுக்கூடத்தில் ... ஒன்றாக விளையாடி.. கதை பேசி.. பாய் விரித்து.. ஏழரை மணிக்கெல்லாம் தூங்கி ..காலை ஆறு மணிக்கு முன் எழுந்த காலம்...!

வீட்டுக்கு ஒரு மாடு ... மாட்டுக் கொட்டகை ... கோனார் கறந்த பாலில் தயிர் உரைக்கு ஊற்றி காலையில் மத்தை வைத்து மோர் கடைந்து ... திரண்ட வெண்ணையில் நெய் உருக்கிய காலம் ..!

வீட்டு முன் .. பெண்கள் சாணி தெளித்து.. அதிகாலையில் கோலம் போட்ட நாட்கள் ..!

சாணி பூசிய அடுப்பாங்கரை .. கரி படிந்த சமையக்கட்டு ... சாணி மொழுகி.. கோலம் போட்ட அடுப்பை .... தரையில் உட்கார்ந்து .. ஊதாங்குழாயில் ஊதி ... புகையுடன் போராடி .. விறகைப் பற்ற வைத்து .. சமையல் செய்த காலம்...!

பெரியவர்களை .. ஜாதி பெயர் ... பட்டப்பெயர்... சொல்லி மரியாதையாக கூப்பிட்டக் காலம் ..!

பிள்ளைக் குட்டிகள் பிறக்கும் போது .. வீட்டிலேயே பிரசவம் ... மிட் வைப் (midwife) என்று சொல்லக்கூடிய நர்சு #அம்மாக்கள்.. செலவில்லாமல் பிரசவம் பார்த்த காலம் ..!

14..15 வயதில் கூட பெண்களுக்கு திருமணம் ... ஒரு குடும்பத்தில் சகஜமாக எட்டு, பத்து பிள்ளைகள் பெற்றெடுத்த காலம்

வீட்டில்.. பிள்ளை குட்டிகளுக்கு உடம்பு சரியில்லை என்றால்.. ஐயங்கடை தெரு பிள்ளை வைத்தியர் வீட்டுக்கு சென்ற காலம் ..!

எல்லாம் பாட்டி வைத்தியம் தான் .. காது வலி என்றால் மிளகாய் கூட்டில் காய்ந்த நல்லஎண்ணையை காதில் ஊற்றிய காலம் ... வயிற்று போக்குக்கு கடுக்காயை ..நீர் கோர்த்து ..கல்லில் தேய்த்து ..வழித்து ..தண்ணீர் கலந்து சங்கில் கொடுத்த காலம் . புண், கீறல், காயம், பூச்சிக்கடிக்கு ...கைவசம் தெரிந்த ஒரே மருந்து .. "சைபால்" டப்பா மருந்து தான்..!

குப்புசாமி, கோவிந்தசாமி, அந்தோணிசாமி என்ற எல்லா சாமிகளின் பெயரை வைத்து கூப்பிட்ட காலம்..!

வீட்டிலேயே வடகம் ...முறுக்கு அச்சில் விரித்த துணியில் பிழிந்து ... அதனுடன் தாளிக்கிற வடகம் உருட்டி வெயிலில் காய போட்ட காலம்...!

வீட்டில் பச்சரிசி வாங்கி ஊறப்போட்டு காயவைத்து உலக்கையில் இடித்து முறுக்கு சுட்ட காலம்...!

#பூச்சந்தையில்.. கோடையில்.. பெரிய குடைமிளகாய்.. சின்ன குடைமிளகாய் வாங்கி.. ஈக்கு குச்சியில் குத்தி .. உப்பு ..புளிச்சத்தயிரில் .. புரட்டி .. ..ஊறப்போட்டு .. காய வைத்த காலம் ..!

பெண்கள் நேரம் கிடைக்கும்போதெல்லாம் கம்பிளி நூலினை வாங்கி ஸ்வெட்டர் நிட்டிங் செய்த காலம்...!

பூச்சந்தையில் சேர் கணக்கில் மல்லிகை பூ மற்றும் கனகாம்பரம் வாங்கி.. வீட்டிலேயே.. பூ பின்னியக் காலம்..!

டெலிகிராம் தந்தி வந்தால் வீடே கூடி என்ன செய்தி வந்துள்ளது என்று ஆர்வத்துடன் கேட்ட சமயம்...!

பொழுதுபோக்கு ... தாயம் .. பல்லாங்குழி...!

சட்டினி .. துவையல் .. குழம்பு மிளகாய் கொத்தமல்லி

அரைப்பதற்கு அம்மிக் குழவி..!

தோசை இட்லி மாவுக்கு ஆட்டுக்கல்...



தோசை ஊற்றுவதற்கு கல்லில் செதுக்கிய தோசைக்கல்..!

குறவர்கள் கூவி விற்ற கொக்கு, மணிப்புறா, கௌதாரி, உள்ளான் மற்றும் காட்டு முயல்கள்..!

விறகு வண்டிகளில் .. முந்திரி விறகு .. சவுக்கு மிலாறு .. துவரை மிலாறு வாங்கின காலம் ...!

பெரிய திண்ணை வீடுகள்.. நடந்து செல்பவர்கள் தைரியமாக வீடுகளில் செம்பு தண்ணி வாங்கி குடித்து .. திண்ணையில் ஓய்வெடுத்துச் சென்ற காலம்...!

பள்ளிகளுக்கு ஒரு சின்ன மஞ்சப் பையில் .. சிலேட்டு, சிலேட்டு குச்சி இரண்டு மூன்று புத்தகங்கள் ..ஸ்கூல் பாக் பற்றித்

தெரியாத காலம்

பள்ளிப் பிள்ளைகள் வாத்தியாரிடம் பிரம்படி வாங்கி .. பெஞ்சு மேல் ஏறி நின்ற காலம்...!

பள்ளிப்பருவத்தில் சில்லு, பளிங்கி, பம்பரம் விளையாடிய காலம்..!

“சாட் பூட் ்ரீ த்திரி” போட்டு ... ஐஸ் பாய்.. கண்ணாமூச்சி விளையாட்டு விளையாடிய காலம்..!

#பசித்தால் .. தட்டுக் கடையில் பாட்டி விற்ற .. ஜவ்வு மிட்டாய் ..தேன் மிட்டாய் .. கமர்கட்டு..!



ஐஸ் அபூர்வமாக பார்க்கப்பட்ட காலம் ..; 1960களில் குச்சி ஐஸ் அறிமுகம் .. சைக்கிள் ஹாண்டல் பாரில்... இரண்டு பெரிய பிளாஸ்க் கேண்கள் மாட்டி .. "ஐஸ் ப்ரூட் .. ஐஸ் ப்ரூட்" என்று தெருக்களில் கூவி விற்ற காலம் ..

ஐஸ் ப்ரூட் .. சேமியா ஐஸ் வாங்கி.. சொட்ட சொட்ட உறிஞ்சி சாப்பிட்டு.. யூனிபார்ம் சட்டைகளெல்லாம் சிவப்பு கலர் கறையாக மாறின காலம்..!

மரங்களில் ஏறி குரங்கு விளையாட்டு..!

பட்டம் செய்து நூலில் மாஞ்சா தடவி .. டீல் விட்ட காலம். ..!

டி.வி., செல்போன் இல்லாத காரணத்தால்.. கதை சொல்பவர்களுக்கு நல்ல மவுசு ... குறிப்பாக சினிமா கதை கேட்பதென்றால் ஆர்வமுடன் கேட்ட காலம்...!

"புல் புல் தாரா"வை நண்பரிடம் வாங்கி.. நம்பரை பார்த்து...கற்று .. சினிமா பாட்டு வாசித்த காலம் ...!

சைக்கிள் டியூப் ரப்பரில் உண்டிவில் செய்து சிட்டுக்குருவிகளை வேட்டையாடிய காலம்..!

சைக்கிளில் ஊர் சுற்றிய காலம் ... சைக்கிள் கம்பெனியில் வாடகை சைக்கிளை எடுத்து .. மாரியங்கோயிலுக்கு சென்று ... விளாரி செடி ...வாதா மடக்கி செடியில் கோத்த மாரியம்மன் கோவில் குச்சி முறுக்கு வாங்கி... சைக்கிள் ஹாண்ட் பாரில் கொடி போல் சொருகி சாப்பிட்ட காலம் ....!

#சைக்கிளில் டைனமோ லைட்.. எண்ணெய் லைட் பொருத்தி ஓட்டிய காலம்

சைக்கிள் ரிம்மில் குச்சியை வைத்து ரோட்டில் ஓட்டிய காலம்..!

குரங்கு பெடல் போட்டு .. சைக்கிள் ஓட்டக் கற்ற காலம் ..!

சினிமா பைத்தியங்களாக .. ஒரு சினிமா விடாமல் .. நாலணா தரை டிக்கெட்டில் சினிமா பார்த்த காலம்.. படம் பார்த்த பிறகு அந்தப் பட பாட்டு புத்தகங்களை வாங்கி ... சினிமா பாடல்களை மனப்பாடம் செய்து பாடிய காலம் ..!

ஒரு டூரிங் டாக்கீஸ் கூட விடாமல் .. மணலில் உட்கார்ந்து .. கருப்பு வெள்ளை ... விநிஸி, சிவாஜி .. சினிமா படங்கள் பார்த்த காலம்..!

பெட்ரோமாக்ஸ் லைட்டு .. பாண்டு வாத்தியங்களுடன் ... சினிமா பிட் நோடீஸ் கொடுத்து .. அனைத்து வீதிகளையும் சுற்றி வந்த தள்ளு வண்டி தட்டி சினிமா விளம்பரங்கள் ..!

சுவரெல்லாம் .. .. "விரைவில் வருகிறது" ... "1010'63 முதல்" .. "10வது வாரம்" ... "கடைசி வாரம்" ... ஸ்லிப் ஒட்டிய ... வண்ண வண்ண சினிமா போஸ்டர்கள் நிறைந்திருந்த காலம்..!

பூரண மதுவிலக்கு.. குடிப்பழக்கம் என்னவென்று தெரியாத காலகட்டம்..

திருட்டுத்தனமாக சாராயம் காச்சி ... சைக்கிள் டியூபில் நிரப்பி .. இடுப்பில் சுற்றி .. வந்து விற்றதைக் கண்ட காலம்..!

கரி என்ஜின் பொருத்திய ரயில் வண்டியில் பயணம் செய்து தலைமுடியில் எல்லாம் கரித்தூள் ஆகிய காலம் ..!

சுவரெல்லாம் கரியில் எழுதிய விளம்பரங்கள் ... தாஜ்மஹால் பீடி .. 555 பீடி ..... 1431 பயோரியா பற்பொடி .. NVS .. TAS ரத்தினம் பட்டினம் பொடி ..

பெரியவர்கள்.. வாழை பட்டையில் லேபிள் ஒட்டி கட்டிய மூக்குப்பொடி பொட்டலம் வாங்கி ... உறிஞ்சி .. பொடி போட்ட காலம்..!

லாரி டயரில்.. தோல் வார் கோத்த செருப்பு வாங்கி ... எங்கு போனாலும் நடந்து சென்ற காலம் ..!

போன் அபூர்வமாக இருந்த காலம் .. றிசிளி போன் கிடையாது... பக்கத்து பணக்கார வீட்டு போனை நம்பி வாழ்ந்த காலம் .. அவ்வீட்டின் பக்கத்து வீட்டுக்கோ எதிர் வீட்டுக்கோ போன் வந்தால் ...தெரு வாசலில் நின்று எதிர்வீட்டுக்கு கேட்கும்படி "உங்க வீட்டுக்கு போன் வந்திருக்கு ... சீக்கிரம் வந்து பேசுங்க ... லைனில் இருக்கிறார்கள் ..' என்று கூப்பிட்ட காலம் ..!

மாட்டு வண்டி .. குதிரை வண்டியில் ... சவாரி செய்த காலம் ..

கார்கள் கிராமத்திற்கு சென்றால் “"பிளசர்” வந்திருக்கு" என்று ஆச்சரியமாக பார்த்த காலம் ..!

சிறுவர்கள் மேல் வார் பொருந்திய அரை டவுசர் ..அரை டிராயர் ..போட்ட காலம் ..!

#தினந்தோறும் .. மக்கள் கூடி .. ஆல் இந்தியா ரேடியோ .. ஆகாஷ்வாணி ஆறரை மணி நியூஸ் கேட்ட காலம்..

“நிரந்தரம் என்று

சொல்லிக் கொள்வதெல்லாம்

நிரந்தரமின்றி போக

மாற்றங்கள் மட்டுமே

நிரந்தரமாக்கிப் போகும்

காலத்தின் சுழற்சியால்..!

காலம் மாறுவதற்கே காலம் .. !

# மாணவ மாணவியருக்கு ஊக்கத்தொகை ஆயிரம் !



**9 ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணவ மாணவிகளுக்கு மாதம்தோறும் 1000 ரூபாய் உதவித்தொகை வழங்கும் திட்டம் மத்திய அரசு கொண்டு வந்துள்ளது**

இந்த திட்டத்தின்படி எட்டாம் வகுப்பு படிக்கும் மாணவ மாணவிகள் தேசிய வருவாய் வழி மற்றும் திறன் படிப்பு உதவித்தொகை திட்ட தேர்வை எழுதவேண்டும்

இந்த தேர்வு ஏழாம் வகுப்பு மற்றும் எட்டாம் வகுப்பு பாடங்களில் இருந்து கேள்விகள் கேட்கப்படும். இந்த தேர்வு மார்ச் 5ஆம் தேதி நடைபெற உள்ளது

இந்த தேர்வில் வெற்றி பெறும் மாணவ மாணவிகளுக்கு ஒன்பதாம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை மாதம் 1,000 ரூபாய் உதவித்தொகை கிடைக்கும் என்பது குறிப்பிடத்தக்கது

இந்த தேர்விற்கான வெற்று விண்ணப்பங்களை 12.01.2022 முதல் 27.01.2022 வரை http://www.dge.tn.gov.in/ என்ற இணையதளம் வழியாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்துடன் தேர்வுக் கட்டணத் தொகை ரூ.50/ சேர்த்து , தாம் பயிலும் பள்ளித் தலைமையாசிரியரிடம் சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள் 27.01.2022.



# குரூப் 4 தேர்வு முடிவை டிஎன்பிஎஸ்சி உடனடியாக வெளியிட வேண்டும்

**குரூப் 4 தேர்வு முடிவை டிஎன்பிஎஸ்சி உடனடியாக வெளியிட வேண்டும் என்று பாமக நிறுவனர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.**

தமிழக அரசுத் துறைகளில் உள்ள நான்காம் தொகுதி பணிகளுக்கான போட்டித் தேர்வுகள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் (டி.என்.பி.எஸ்.சி) மூலம் நடத்தி முடிக்கப்பட்டு 7 மாதங்கள் ஆகவுள்ள நிலையில், அத்தேர்வுகளுக்கான முடிவுகள் இன்றுவரை வெளியிடப்படவில்லை. பிப்ரவரி மாதம் தேர்வு முடிவுகள் வெளியிடப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், அதற்கான அறிவிப்பு வராததும், அறிகுறிகள் கூட தென்படாததும் தேர்வு எழுதிய மாணவர்களிடையே கவலையை ஏற்படுத்தியுள்ளது.

தமிழ்நாடு அரசுத் துறைகளில் காலியாக உள்ள கிராம நிர்வாக அலுவலர், இளநிலை உதவியாளர், தட்டச்சர் உள்ளிட்ட 11 வகையான பணிகளுக்கு 7301 பேரை தேர்வு செய்வதற்கான நான்காம் தொகுதி தேர்வு, கடந்த ஆண்டு மார்ச் மாதம் 30 ஆம் தேதி அறிவிக்கப்பட்டு, கடந்த ஜூலை 24 ஆம் தேதி நடத்தப்பட்டது. டிஎன்பிஎஸ்சி வெளியிட்டிருந்த அறிவிக்கையின்படி, ஜூலை மாதம் நடத்தப்பட்ட நான்காம் தொகுதி தேர்வுக்கான முடிவுகள் கடந்த அக்டோபர் மாதம் வெளியிடப்பட்டிருக்க வேண்டும். அதே மாதத்தில் சான்றிதழ் பதிவேற்றம் செய்யப்பட்டு, நவம்பர் மாதத்தில் அவை சரிபார்க்கப்பட்டு, கலந்தாய்வு நடத்தி பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், அவை எதுவுமே நடக்கவில்லை.

அக்டோபர் மாதத்தில் வெளியிடப்பட வேண்டிய முடிவுகள் நவம்பர் மாதத்தில் வெளியாகும்; டிசம்பர் மாதத்தில்

Owned and Published by M.ABDUL RAHMAN from No.61, Venkata Mesthiri Street, Mannadi, Chennai-600 001 and Printed S.ALI MOHAMED SAYEED by J.M.PROCESS, at 22/49, Subedar Hussain Street, Border Thottam, Royapettah, Chennai-600 014. Editor: K.MADHUSUDHANAN

வெளியாகும்; ஜனவரி மாதத்தில் வெளியாகும் என்று செய்திகள் தான் வெளியாகினவே தவிர, முடிவுகள் வெளியாகவில்லை. ஜனவரி மாத இறுதியில் தான், நியமனம் செய்யப்பட வேண்டிய நான்காம் தொகுதி பணியிடங்களின் எண்ணிக்கை 9801ஆக உயர்த்தப்படுவதாகவும், பிப்ரவரியில் முடிவுகள் அறிவிக்கப்படும் என்றும் டிஎன்பிஎஸ்சி அறிவித்தது. ஆனால், அதற்கான நகர்வுகள் எதுவும் நடப்பதாகத் தெரியவில்லை. எப்போது முடிவுகள் வெளியாகும் என்பது யாருக்கும் தெரியவில்லை.

முதல்நிலைத் தேர்வுகள், முதன்மைத் தேர்வுகள், நேர்காணல்கள் என 3 முக்கியக் கட்டங்களைக் கொண்ட குடிமைப் பணிகளுக்கான அனைத்து நடைமுறைகளும் தேர்வு அறிவிக்கைவெளியிடப்பட்ட ஓராண்டில் நிறைவடைகின்றன. ஆனால், ஒரே தேர்வை கொண்ட நான்காம் தொகுதி பணிகளுக்கு தேர்வு அறிவிக்கை வெளியிடப்பட்டு ஓராண்டு நிறைவடையவிருக்கும் நிலையில், இன்னும் போட்டித் தேர்வு முடிவுகள் கூட வெளியிடப்படாதது அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் படுதோல்வி ஆகும்.



2014ஆம் ஆண்டுக்கு பிந்தைய பத்தாண்டுகளில் இதுவரை 6 முறை நான்காம் தொகுதி தேர்வுகளை அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்தியிருக்கிறது. அவற்றில் கடந்த ஆண்டு நடத்தப்பட்ட தேர்வு தவிர மீதமுள்ள 5 தேர்வுகளில் 3 தேர்வுகளின் முடிவுகள் 5 மாதங்களுக்குள்ளாகவும், 2 தேர்வுகளின் முடிவுகள் 3 மாதங்களுக்குள்ளாகவும் வெளியிடப்பட்டிருக்கின்றன. ஆனால், கடந்த ஆண்டு நடத்தப்பட்ட தேர்வுகளின் முடிவுகள் தான் 7 மாதங்களாகியும் வெளியிடப்படவில்லை. மாணவர்களின் எதிர்காலம் தொடர்பான விஷயத்தில் தேர்வாணையம் இவ்வளவு அலட்சியமாக நடந்து கொள்வது கண்டிக்கத்தக்கது.

தமிழ்நாட்டில் அரசு வேலைவாய்ப்புக்காக வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து வைத்து காத்திருப்பவர்களின் எண்ணிக்கை 31.01.2023 நிலவரப்படி 67 லட்சத்து 58,698 ஆகும். வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்யாதவர்களையும் கணக்கில் கொண்டால் இந்த எண்ணிக்கை ஒன்றரை கோடியைத் தாண்டும். அதனால் தான் பத்தாம் வகுப்பு கல்வித்தகுதியை அடிப்படையாகக் கொண்ட நான்காம் தொகுதி பணிகளுக்கான தேர்வுகளை எழுத 22 லட்சத்திற்கும் கூடுதலானவர்கள் விண்ணப்பம் செய்தனர். அவர்களில் 18.50 லட்சம் பேர் எழுதினார்கள். இவ்வளவு இளைஞர்களின் எதிர்காலம் அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் கைகளில் இருக்கும் நிலையில், அதற்கேற்ற பொறுப்புணர்வு மற்றும் வெளிப்படைத் தன்மையுடன் நடந்துகொள்ள அரசுப் பணியாளர் தேர்வாணையம் தவறிவிட்டது.

அரசுப்பணி என்பது தான் தமிழ்நாட்டில் இன்று லட்சக்கணக்கான இளைஞர்களின் கனவாக உள்ளது. ஒரு போட்டித் தேர்வை எழுதிய மாணவர்கள், அதன் முடிவை அறிந்தால் தான் அடுத்தப் போட்டித் தேர்வுக்கு முழு மனதுடன் தயாராக முடியும். இத்தகைய சூழலில் ஒரு தேர்வை அறிவித்து, நடத்தி, முடிவுகளை அறிவிப்பதற்கு ஓராண்டை பணியாளர் தேர்வாணையம் எடுத்துக்கொள்வது மாணவர்களுக்கு கடுமையான மன உளைச்சலை ஏற்படுத்தும். அவர்களின் உணர்வுகளை தேர்வாணையம் மதிக்க வேண்டும்.

நான்காம் தொகுதி பணிகளுக்கான போட்டித் தேர்வு முடிவுகளை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் உடனடியாக வெளியிட வேண்டும். அதுமட்டுமின்றி, இனிவரும் காலங்களில் ஓர் அடுக்கு கொண்ட போட்டித் தேர்வுகளுக்கான அறிவிக்கை வெளியிடுவதில் தொடங்கி பணி நியமன ஆணை வழங்குவது வரையிலான அனைத்து நடைமுறைகளும் 5 மாதங்களில் முடிக்கப்பட வேண்டும். ஈரடுக்கு தேர்வு கொண்ட முதல் மற்றும் இரண்டாம் தொகுதி பணிகளுக்கான அறிவிக்கை வெளியிடுவதில் தொடங்கி நியமன ஆணை வழங்குவது வரையிலான அனைத்து நடைமுறைகளும் 9 மாதங்களில் முடிக்கப்படுவதை அரசுப் பணியாளர் தேர்வாணையம் உறுதி செய்ய வேண்டும் என வலியுறுத்துகிறேன்." இவ்வாறு ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

MANITHA URIMAIGAL MEETPU Tamil Fortnightly, November 1-15-2018
Regd. with the Registrar of News Papers for India under No. TNTAM / 2017 / 74330 / R.Dis.481 / 17

# என்னை மறக்கிறார்

குருவிகள் முட்டையிட்டு அடைகாப்பதால்,
குஞ்சு பொரிக்கிறது!

வெண்ணிலாவின் பாசத்தை என் நெஞ்சில்
அடைக்காப்பதால் என் நெஞ்சு வெடிக்கிறது!

என் நெஞ்சு வெடிக்கும் போதெல்லாம் என்
வெண்ணிலா வெளிப்படுகிறாள்!
என் மன மன்றத்தில் கவி படிக்கிறாள்!

என்னை மறக்கிறாள்

இந்நேரத்தில் உற்றுநோக்குங்கள்
அந்த மரக்கூட்டை

குஞ்சுகள் சிறகுகள் முளைத்து.
சிறகடித்து பறக்கிறது
அடைகாத்த தாய் குருவியை மறக்கிறது!

இந்நேரத்தில் உற்று நோக்குங்கள்
என் மனக் கூட்டை
என் வெண்ணிலா
சிறகடித்துப் பறக்கிறாள்...

அடைகாத்த
என்னை மறக்கிறாள்!

- M. அப்துல்ரகுமான் (வழக்கறிஞர்)
நிறுவனர்
மக்கள் ஊழல் தடுப்பு இயக்கம்
மனித உரிமைகள் மீட்பு
95434 10000

